**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

அசல் வழக்கு எண். 40/2019

நாள் : 27.03.2025

வா.சா.2 திரு. ராமு மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**முதன்மை விசாரணை தொடர்ச்சி (அனுமதியுடன்)**

<u>ஆவணங்கள்</u>

| வ.எண் | தேதி | ஆவணங்கள் | Description | Remarks |
|---|---|---|---|---|
| 1) | 16.09.2002 | வா.சா.ஆ.6 | தாவா சொத்தினை பொறுத்து பாத்திமாகனி, முகம்மது இப்ராகீம் என்பவருக்கு எழுதிக்கொடுத்த இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் | வலைதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்த நகல் |

மேற்படி வா.சா.ஆ.6 வலைளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட எலக்ட்ரானிக்ஸ் எவிடன்ஸ் என்பதால் இந்திய சாட்சிய சட்ட பிரிவு 65 B (4) ன்படி சான்றிதழ் இணைக்கப்படவில்லை. எனவே மேற்படி சான்றிதழ் தாக்கல் செய்வதை பொறுத்து மேற்படி ஆவணத்தின் ஏற்றுக்கொள்ளும் தன்மை குறித்து பின்னர் தீர்மானிக்கப்படும் என நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்/-ஏ.கே.மெஹ்பூப் அலிகான் ,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .